**MCOP NO:3793/2021 DATE:16.07.2024**

ம.சா.2

பெயர்.செந்தில்குமார்

த/பெ.திரு.சிவலிங்கம்

வயது. 40

**2 மற்றும் 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற சம்மன் வரவில்லை. மனுதாரர் கேட்டு கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். விபத்தை நான் நேரில் பார்த்தேன் என்பதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்த புகார் நான் கொடுக்கவில்லை. காவல்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் இந்த விபத்து சம்பந்தமாக சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து நடந்த சாலையில் ஒரே நேரத்தில் இரண்டு லாரிகள் செல்லலாம். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன். கார் ஓரமாக நின்று கொண்டு இருந்தது என்றால் இல்லை, நடுரோட்டில் நின்று கொண்டு இருந்தது. இறந்தவர் இருசக்கர வாகனம் ஒட்டி சென்றார், அப்போது கார் மீது மோதாமல் இருப்பதற்காக வலதுபக்கம் செல்லும் போது இடது ஹண்டில்பார் கார் மீது உராய்ந்தது நிலைதடுமாறி செல்லும் போது பின்னால் வந்த லாரி இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. கார் ஓரமாக நின்றது என்றும், இருசக்கர வாகனத்தை ஒட்டியவர் தான் அதிவேகமாக சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றும், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சொன்னால் சரியல்ல. அவருக்கு தலை மற்றும் உடம்பு பகுதியில் காயம் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் பயணம் செய்பவர்கள் தலைகவசம் அணிந்து செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்டவரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. குற்ற இறுதி அறிக்கையின் சாட்சி பட்டியலில் என் பெயர் இல்லை. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், இருசக்கர வாகனத்தை ஒட்டியவர் கவனகுறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், என்னுடைய சாட்சியம் ஏற்றுகொள்தக்கதல்ல என்றும், சொன்னால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

19.07.2021 அன்று காலை 11.15 நடந்த விபத்தை நான் நேரில் பார்த்தேன். காவல்துறையினரிடம் விபத்து நடந்த இடத்தில் நடந்த சம்பவத்தை பற்றி கூறினேன், குற்ற இறுதி அறிக்கையில் என்னை சாட்சியாக சேர்க்கவில்லை. விபத்தை ஏற்படுத்திய காரின் பதிவு எண்.TN23BJ9669 ஆகும். நடுசாலையில் நிறுத்தபட்டு இருந்த கார் சமிக்ஞை இல்லாமல்

இருந்தது என்றால் சாிதான். காா் நடுரோட்டில் நின்று கொண்டு இருந்ததால் அதன் மீது இருசக்கர வாகனத்தை ஓட்டியவா் காா் மீது உரசியதால் தான் சாய்ந்தாா், பின்னால் வந்த லாாி அவா் மீது மோதியது.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.